# செய்தி வெளியீடு

**இலங்கையின் பொருளாதாரம் 2017 முதலாம் காலாண்டில் 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது**

## இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்
## 2017 முதலாம் காலாண்டு


தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய கொள்கைகள் மற்றும்  பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-011-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk


……………………………………………………………………………………………………..

இலங்கையின், 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) உற்பத்தி அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலையில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியும் அது தொடர்பான பொருளாதாரக் குறிகாட்டிகளும்  தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

2016 ஆம் ஆண்டிலிருந்து நான்கு மாகாணங்களான வடக்கு, கிழக்கு, வட-மத்தி மற்றும் வட-மேற்கில் காணப்பட்ட கடும் வரட்சி நிலைமையால், முக்கியமாக நாட்டின் விவசாய நடவடிக்கைகள் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் தேசிய கணக்குகளின் மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையை வெளியிடுகையில், 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான பொருளாதார வளர்ச்சி விகிதம் 3.8 சதவீதமென தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்திப் பெறுமதி 2017 முதலாம் காலாண்டில் ரூபா 2,161,770 மில்லியன்களாக பதிவு செய்ததுடன் , இது  2016 முதலாம் காலாண்டில் ரூபா 2,082,544 மில்லியன்களாக பதிவு செய்தது.

2017 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் நான்கு பிரதான பகுதிகளான: விவசாயம், கைத்தொழில், சேவைகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீதான மானியங்கள் கழிக்கப்பட்ட வரிகள் நடப்பு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தமது பங்களிப்பினை முறையே 7.0 சதவீதம், 30.8 சதவீதம், 52.3 சதவீதம் மற்றும் 9.9 சதவீதமாக பங்களிப்பு செய்துள்ளது. இக் காலாண்டுப் பகுதியில், கைத்தொழில், நடவடிக்கைகள் உயர்  வளர்ச்சி வீதமாக 6.3 சதவீதத்தை பதிவு செய்துள்ளது. சேவைகள் நடவடிக்கைகள் 3.1 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது. கடுமையான காலநிலை நிலைமையின் பாதிப்பினால் விவசாய நடவடிக்கைகளின் செயற்பாடு மேலும் சுருங்கியதுடன், 3.3 மறை சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

விவசாய துறையின் உப பிரிவுகளுக்கிடையில், ‘வாசனைத்திரவியங்களின் வளர்ச்சி’ , ‘கால்நடை உற்பத்தி ’, ‘காடாக்கலும் குத்திகளும்’ மற்றும் கடல் மீன்பிடி என்பன மிக உயர் வளர்ச்சி வீதங்களை பதிவு செய்துள்ளது: அவை முறையே 6.1 சதவீத , 6.9 சதவீத, 9.3 சதவீத மற்றும் 5.8 சதவீதங்களாகும். இக்காலப் பகுதியில்  ‘அரிசியின் வளர்ச்சி’ மற்றும் ‘எண்ணைப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ச்சி’ என்பன கணிசமாக வீழ்ச்சியடைந்துள்ளதுடன் 53.1 சதவீத, 10.2 சதவீத வளர்ச்சி வீதங்களை முறையே பதிவு  செய்தன. இப் பயிர்கள் வளரும் பிரதேசங்களில் காணப்பட்ட வரட்சியே இதற்கு காரணமாகும். இக்கால இடைவேளையில் ’தேயிலை வளர்ச்சி’ மற்றும் ‘இறப்பர் வளர்ச்சி’ என்பன முறையே 5.7 சதவீத, 17.2 சதவீத  வீழ்ச்சி வீதத்தை மேலும்  எதிர்கொள்கிறது.

2017 இன் முதலாம் காலாண்டில் ஒட்டுமொத்த கைத்தொழில் நடவடிக்கையும் 6.3 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு மேலும் விரிவடைந்துள்ளது. கைத்தொழில் துறையின் பிரிவுகளுக்கிடையில் 'கட்டடவாக்கம்' மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்புடன், 2016 இன் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இக் காலாண்டுப் பொழுதில் 16.1 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை மேலும் காட்டுகின்றது. மேலும், உப பிரிவுகளான, .'சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்', 'ஏனைய உலோகமில்லா கனிப்பொருள் உற்பத்திகளின் தயாரிப்பு', பொறியினதும் கருவியினதும் தயாரிப்பு' மற்றும் 'நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் வழங்கல்' என்பன முறையே 17.9 சதவீத, 19.5 சதவீத, 18.2 சதவீத மற்றும் 21.6 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை காட்டுவதுடன் 2017 முதலாம் காலாண்டில் கைத்தொழில் துறையை பலப்படுத்தியுள்ளன. இக் காலாண்டுப் பகுதியில் 'புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு' 2016 முதலாம் காலாண்டில் பதிவு செய்த சுருக்கத்தை திரும்பப் பெற்றுள்ளதுடன் 0.6 சதவீத நேர் வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

2016 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது, 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சேவைத் துறையின் நடவடிக்கைகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு உயர் பங்களிப்பை 52.4 சதவீதத்தை வழங்குவதுடன், 3.5 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்கிறது. சேவைத் துறையின் செயற்பாடு விசேடமாக பின்வரும் உப பிரிவுகளின் 'மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்' 'பொருட்கள், பயணிகளின் போக்குவரத்து மற்றும் களஞ்சியம்' 'நிதிச் சேவை நடவடிக்கைகள்', , 'மனித நலம்,வதிவிடக் கவனிப்பு மற்றும் சமூக நலச் செயற்பாடுகள்', குறிப்பிடத்தக்க உயர் வளர்ச்சி வீதங்களை முறையே 4.5 சதவீத, 3.1 சதவீத 14.9 சதவீத மற்றும் 11.1 சதவீதத்தை 2016 ஆம் ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடும் போது இது பதிவு செய்துள்ளன. 'வேறு தனிப்பட்ட சேவைகள் நடவடிக்கைகள்' 2017 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சிறிய அளவிலான 2.0 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்துள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2017 ஆம் முதலாம் காலாண்டுக்கான தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்